ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2024 செத்தெம்பர் 27 |

**நாணயக் கொள்கை மீளாய்வு: இல. 05 - 2024 செத்தெம்பர்**

# இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுகின்றது

*இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது 2024 செத்தெம்பர் 26ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. பணவீக்கமானது நடுத்தர காலத்தில் 5 சதவீதம் கொண்ட இலக்குடன் இசைந்து செல்வதனை உறுதிசெய்கின்ற அதேவேளை, பொருளாதாரம் அதன் அதிகபட்சமான உள்ளார்ந்த ஆற்றலினை அடைவதை இயலச்செய்யும் நோக்கில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்கள் மீதான அண்மைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கவனமாக கருத்திற்கொண்டதன் பின்னர் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது. அடுத்த சில காலாண்டுகளில் பணவீக்கமானது 5 சதவீதம் கொண்ட இலக்கிற்கு மிகவும் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டு, நிர்வாக ரீதியாக நிர்ணயிக்கப்படும் விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் நிரம்பல் நிலைமைகளின் மெதுவடைதல் என்பனவற்றினால் தூண்டப்பட்டு மிக நெருங்கிய எதிர்காலத்தில் பணச்சுருக்கத்தினை பதிவுசெய்யக்கூடுமென்பதனைச் சபை அவதானத்தில் கொண்டது.*

## முதன்மைப் பணவீக்கமானது அண்மைய காலத்தில் பணவீக்க இலக்கிற்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது

மின்சாரத் தீர்வைகள் மற்றும் எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளிற்கான அண்மைய கீழ்நோக்கிய திருத்தங்கள் மற்றும் தளம்பலடையும் உணவு விலைகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சி என்பவற்றுடன் முதன்மைப் பணவீக்கமானது குறிப்பிடத்தக்களவு மெதுவடைந்து காணப்பட்டது. மேலும், பொருளாதாரத்தின் அடிப்படைக் கேள்வி நிலைமைகளைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமும் குறைவானதொரு வேகத்தில் மிதமடைந்தது. இதற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது எதிர்வருகின்ற மாதங்களில் குறிப்பிடத்தக்களவில் இலக்கிற்குக் கீழாகக் காணப்படக்கூடிய அதேவேளையில் மையப் பணவீக்கமானது சராசரியாக தற்போதைய மட்டங்களை அண்மித்துத் தொடர்ந்து காணப்படக்கூடுமென அண்மைய எறிவுகள் உறுதிப்படுத்துகின்றன. பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு பணவீக்கமானது 2025இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்ட பின்னர் நடுத்தர காலத்தில் 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்துடன் படிப்படியாக இசைந்து செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**கொ.நு.வி.சுட்டெண்ணின்* அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்க எறிவுகள்**
**(காலாண்டு சராசரி, ஆண்டிற்காண்டு, %)**




***மூலம்:** மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்*

* வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2024 செத்தெம்பர் மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன

*குறிப்பு: வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றது. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றன*

**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.**

2024 செத்தெம்பர் மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி உத்வேகம், படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் தோற்றம் பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

உயர்ந்தளவிலான கூலிகளுக்கான கேள்வியின் சாத்தியமான அடைவு, வேளாண்மை உற்பத்தியைப் பாதிக்கின்ற சாத்தியமான பாதகமான வானிலை நிலைமைகள், உயர்ந்த மட்டங்களிலான சாத்தியமான ரூபா பெறுமானத்தேய்வு, எதிர்பார்க்கப்படுகின்ற இறைத் திரட்சிப் பாதையிலிருந்தான ஏதேனும் விலகல் மற்றும் நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில் உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகள் மீதான சாத்தியமான மேல்நோக்கிய அழுத்தங்கள் போன்ற காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளிற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. அதேவேளை, பணவீக்க எறிவுகளுக்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஏனையவற்றிற்கிடையில், பொதுமக்களின் குறைவடைந்த கொள்வனவுச் சக்தியின் தொடர்ச்சியான தாக்கம், பொருட்கள் மற்றும் பணிகள் மீதான வரிகளில் சாத்தியமான எதிர்காலக் குறைப்புக்களின் நேரடித் தாக்கம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் சாத்தியமான விலைக் குறைப்புக்கள் என்பவற்றினை உள்ளடக்குகின்றன.

பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான ஏதேனும் மாற்றங்கள் பற்றி கிரமமானதோர் அடிப்படையில் பொது மக்களுக்குத் தொடர்பூட்டி தகவலறிந்த தீர்மானங்களைப் பொது மக்கள் மேற்கொள்வதனை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணிப்புடனுள்ளது.

**உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் மீட்சியானது தொடர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், பொருளாதாரமானது 2024இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.3 சதவீதம் கொண்ட (ஆண்டிற்கு ஆண்டு) விரிவாக்கமொன்றினைத் தொடர்ந்து 2024இன் இரண்டாம் காலாண்டில் 4.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அண்மைய பொருளாதார குறிகாட்டிகள் 2024இன் முதலாம் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட வலுவான வளர்ச்சிப் பெறுபேறானது ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் தொடரக்கூடும் என்பதையும் இது

ஆரம்பத்தில் எறிவுசெய்ததிலும் பார்க்க உயர்ந்தளவிலான வளர்ச்சியொன்றினைத் 2024இல் தோற்றுவிக்குமென்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

**சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்களின் ஒட்டுமொத்த கீழ்நோக்கிய சீராக்கம் தொடர்வடைந்தது**

தற்போதைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சியுடன் இணைந்து, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான தனியார் துறைக்கான கொடுகடனானது 2024 மே தொடக்கம் குறிப்பிடத்தக்களவு விரிவடைந்துள்ளதுடன் 2024இன் இரண்டாம் காலாண்டிற்கான துறைசார் தரவுகள் சகல முக்கிய பொருளாதார துறைகளிலும் பரந்த அடிப்படையிலான வளர்ச்சியொன்றினைக் குறித்துக்காட்டுகின்றன. முன்னோக்கிப் பார்க்கையில், தாழ்ந்தளவிலான சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள் மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையில் எதிர்பார்க்கப்படும் மீட்சி என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு தனியார் துறைக்கான கொடுகடன் விரிவாக்கம் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, சனாதிபதித் தேர்தலிற்கு மத்தியில் உணரப்பட்ட நிச்சயமற்றதன்மைகளின் காரணமாக அழுத்தங்களிற்கு உட்பட்ட அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்களானது தேர்தலைத் தொடர்ந்தான திறைசேரி உண்டியல் ஏலத்தில் தளர்வடையும் ஆரம்ப சமிக்ஞைகளைக் காட்டின.

**ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையானது தொடர்ந்தும் வலுவடைந்து காணப்பட்டது**

ஏற்றுமதி வருவாய்களுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட பாரியளவிலான விரிவாக்கமொன்றினால் உந்தப்பட்டு வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது 2023இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஓகத்தில் முடிவடைகின்ற எட்டு மாத காலப்பகுதியில் (தற்காலிகமானது) விரிவடைந்தது. இக்காலப்பகுதியில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் மேம்பட்டு வெளிநாட்டு நடைமுறைக் கணக்கினை வலுப்படுத்தின. அதேவேளையில், இடைக்கிடையேயான தளம்பல்களிற்கு மத்தியில் இலங்கை ரூபாவானது 2024இன் இதுவரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலரிற்கெதிராக 7 சதவீதத்திற்கு மேலதிகமாக உயர்வடைந்ததுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி உள்நாட்டுச் சந்தையிலிருந்து குறிப்பிடத்தக்களவிலான வெளிநாட்டுச் செலாவணியினைக் கொள்வனவு செய்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனாக (சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக) விளங்கின. பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் தொடர்ச்சி மற்றும் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் விரைவான நிறைவு என்பன வெளிநாட்டுத் துறைத் தாங்கிருப்புக்களை மேலும் வலுப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும்.

**கொள்கை வட்டி வீதங்கள் அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணப்படுகின்றன**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட விடயங்கள் உள்ளடங்கலாக தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது, 2024 செத்தெம்பர் 26ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதம் கொண்ட அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. தற்போதைய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடானது

குறிப்பாக, தொடர்ச்சியாகத் தளர்த்தப்பட்ட சந்தைக் கடன்வழங்கல் வட்டி வீதங்கள், தனியார் துறைக்கான கொடுகடனின் விரிவாக்கம் மற்றும் தாழ்ந்தளவிலான பணவீக்கச் சூழலிற்கு மத்தியிலான உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் வலுவான மீளெழுச்சி என்பன தொடர்பில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை விளைவித்துக் கொண்டிருக்கின்றதென்பதனைச் சபை கவனத்தில் கொண்டது. முன்னோக்கிச் செல்கையில், நாணயக் கொள்கைச் சபையானது பணவீக்க அபிவிருத்திகள் மற்றும் ஏனைய பேரண்டப்பொருளாதார மாறிகள் என்பன குறித்து உள்வருகின்ற தரவுகளைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்யுமென்பதுடன் தரவுகளினால் உந்தப்பட்ட கொள்கைகளை தேவைக்கேற்ப மேற்கொள்ளும்.

| | | |
|---|---|---|
| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு வீதம் என்பன மாற்றமடையவில்லை** | |
| | துணைநில் வைப்பு வசதி வீதம் | 8.25% |
| | துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 9.25% |
| | நியதி ஒதுக்கு விகிதம் | 2.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2024 செத்தெம்பர் 27ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக் கொள்கை மீளாய்வு மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2024 நவெம்பர் 27ஆம் நாளன்று வெளியிடப்படும்.

*** தரவு இணைப்பு** பெறுவழி: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/mpr05_2024_t.pdf